S-1

# தமிழ் இணையக் கல்விக்கழகம்
# சென்னை – 600 025.

## இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)
## இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்

## ஜனவரி – பிப்ரவரி 2025
## A011 காப்பிய இலக்கியம்

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

### பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக. (15x1=15)**

1. இளங்கோவடிகளுக்குச் சிலப்பதிகாரக் கதை நிகழ்ச்சிகளைக் கூறியவர் யார்?
2. மணிமேகலைக் காப்பியத்திற்கு ஆசிரியர் இட்ட பெயர் என்ன?
3. ஆருயிர் மருந்து என்பது என்ன?
4. மணிமேகலை யார் உருவில் அறம் மேற்கொண்டாள்?
5. கோவிந்தையை யாருக்குச் சீவகன் மணம் முடித்தான்?
6. சேக்கிழார் பிறந்த ஊர் எது?
7. பெரியபுராணத்தின் மூல நூல்கள் யாவை?
8. வண்ணம் என்ற சொல்லின் இரு பொருள்கள் யாவை?
9. மகாபாரத நிகழ்ச்சிகளை விவரிக்கும் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் இரண்டினைக் கூறுக.
10. இரட்சணிய யாத்திரிகத்தின் மூல நூல் எது?
11. தேம்பாவணியின் மூல நூல் எது?
12. சீறாபுராணத்தில் காப்பியக் காண்டங்கள் என்னென்ன?
13. தீன் என்பதன் பொருள் என்ன?
14. இராவணகாவியம் எந்த நூலுக்கு எதிராகத் தோன்றியது?
15. சுத்தன் தன் தொண்டர்களை எத்தனை குழுக்களாக அமைத்தான்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. சிலப்பதிகாரத்தின் இலக்கிய நயம் பாராட்டுக.
2. மெய்ப்பொருள் நாயனாரின் இறைப்பற்று பற்றிக் கூறுக.
3. தேம்பாவணியில் இடம்பெற்றுள்ள விவிலியக் கிளைக்கதைகள் இரண்டனைக் குறிப்பிடுக.
4. கண்ணதாசனின் இயேசுகாவியம் பற்றிக் கூறுக.
5. இக்கால இஸ்லாமியக் காப்பியங்கள் சிலவற்றை அறிமுகப்படுத்துக.
6. இராவணனின் பண்பு நலன்களைக் கூறுக.
7. பூங்கொடிக் காப்பியச் செய்திகளைச் சுருக்கி எழுதுக.
8. வளையாபதி உணர்த்தும் நல்ல அறம் குறித்து சுருக்கி எழுதுக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) கம்பரின் கவித்திறனை விவரிக்க.

(அல்லது)

(ஆ) வில்லிபாரதத்தின் காப்பிய நலன் பற்றி விவரிக்க.

2. (அ) இரட்சணிய யாத்திரிக் காப்பியத் தன்மையை எழுதுக.

(அல்லது)

(ஆ) தேம்பாவணிக் காப்பியத்தின் தனிச் சிறப்புகள் யாவை?

3. (அ) முற்கால இஸ்லாமியக் காப்பியங்கள் யாவை அவற்றை அறிமுகப்படுத்துக.

(அல்லது)

(ஆ) பாரத சக்தி மகாகாவியம் என்ற காப்பியம் உணர்த்திம் இந்திய தேசியம் பற்றிக் கூறுக.

***